3. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்கள் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு,

"I have been informed by the Commissioner of Police, Madras, to the effect that Thiruvalargal K. Anbazhagan, S. Balan, P. Ponnurangam, A. Selvarasan and Parithi Ilamvazhuthi, Members of the Legislative Assembly have been arrested on the afternoon of 17th November 1986 under Section 143 I.P.C. 41 Madras City Police Act, Section 2 of the Prevention of Insults to National Honour Act, 1971 read with 7 (1) (a) Criminal Law Amendment Act, when they assembled in violation of the prohibitoray orders in force in the City and burnt Part XVII of the Constitution of India pertaining to the Official Language of the Union to condemn the alleged imposition of Hindi by the Centre.

Thiruvalargal K. Anbazhagan, S. Balan and Parthi Ilamvazhuthi were remanded till 1st December 1986 and Thiruvalargal A. Selvarasan and P. Ponnurangam were remanded till 28th November 1986 and ledged in the Central Prison, Madras on 17th November 1986."

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (Senate) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருக்கும் திருவாளர்கள் (1) அ. தங்கராசு, (2) ஆர். தியாகராசன், (3) பி. என். ராமச்சந்திரன் ஆகியோரின் பதவிக் காலம், 1986 டிசம்பர் மாதம் 5-ஆம் தேதியுடன் முடிவடைவதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்;